**இடர் முகாமைத்துவ நிலையம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இடர் முகாமைத்துவ நிலையத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிலையத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிலையத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிலையத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

---

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

---

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ''சிறப்பாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) வருடாந்த இருப்பு மீளாய்வின் போது இனங்காணப்பட்ட கிரயம் ரூபா 1,652,924 தொகையான காலாவதியான அழிக்கப்பட வேண்டிய பொருட்கள் மற்றும் இனங்காணப்பட்ட பொருள் பற்றாக்குறைகளுக்கும் காணாமல் போன பொருட்களுக்கும் நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என தயவாகத் தெரிவிக்கிறேன். | காலாவதியான அழிக்கப்பட வேண்டிய மற்றும் இனங்காணப்பட்ட பொருள் பற்றாக்குறைக்கும் காணாமல் போன பொருட்களுக்குமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) நிறுவனத்திற்கு எதிராக மோட்டார் வாகன வழங்குனரினால் ரூபா 15 மில்லியனை அறவிடுவதற்கு வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக இன்னும் 07 வெளிநாட்டுத் தரப்பினர்களும் நிறுவனத்திற்கு எதிராக இழப்பீட்டினைக் கோரி வழக்குத்தாக்கல் செய்திருந்த போதிலும், அப்பொறுப்புக்கள் சம்பந்தமாக இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்தல் அல்லது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் இடம்பெற்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இத்தகவல்களை நிதிக் கூற்றுக்களின் மூலம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தயவாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்படுதல் வேண்டும். |
| (இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 15 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான பெறுமதியை ஒப்பீடு செய்யும் கூற்றும் அவை தொடர்பான நிதிக்கூற்றுக்களில் | நிதிக்கூற்றுத் தொகுதியின் பக்க இலக்கம் 06 இல் காட்டப்பட்டுள்ளது. அதில் நிறுவனத்தின் செயல் முன்னேற்றத்தை பாதீடு செய்யப்பட்ட தரவுகளுடன் ஒப்பீடு செய்து சமர்ப்பிக்கும் போது | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்புக்களின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வெளிப்படுத்தல்களும் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களைப் பயன்படுத்வோருக்கு மிகவும் இலகுவாக விளங்கிக் கொள்ளும் வகையில் அது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், இவ்வித்தியாசத்தை ஒப்பீடு செய்யும் நிரல் அத்தியாவசியமற்றது என நியமத்திலும் காட்டப்பட்டுள்ளது. | |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 19 இற்கு இணங்க ஊழியர் புரள்வு, ஊனமுற்றோர் மற்றும் ஏற்கெனவே ஓய்வு பெறுதல், கழிவு விகிதம், எதிர்கால சம்பள அதிகரிப்பும் நலன்களும் முதலியன காப்பீட்டு எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டு காப்பீட்டு மதிப்பீட்டு முறைமைக்கு (Actuarial valuation method) இணங்க ஊழியர் நலன்கள் கணிப்பீடு செய்யப்பட்டு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தினால் சாதாரண சட்டரீதியான ஒழுங்கு விதிகளை அடிப்படையாகக் கொண்டு ரூபா 39 மில்லியன் நிதிஏற்பாடு மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது தேவையான முயற்சிகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு** | | **இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 237 | மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 71,750,056 தொகையான இடர்களைக் குறைக்கும் 14 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டது என்பதற்கான முறைப்படியான வேலைகளை முடிவுறுத்தும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களுக்கான வேலைகளை முடிவுறுத்தும் அறிக்கை 13 செயற்திட்டங்களுக்காக கிடைத்துள்ளதுடன் எஞ்சிய செயற்திட்டங்களின் கொடுப்பனவு பூர்த்தி செய்யப்பட்டிருக்காததனால் இறுதி அறிக்கை கிடைத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வேலைப் பூர்த்தி அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 751 | அனைத்து பொருட்களினதும் பெறுவனவுகள் மற்றும் வழங்கல்கள் முறைப்படியாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் நிலையத்தினால் பெறுவனவுகள் மற்றும் வழங்கல் அச்சந்தர்ப்பத்திலேயே ஏடுகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்நிலைமை எதிர்காலத்தில் ஏற்படுவதனைத் தவிர்ப்பதற்கு களஞ்சிய பொறுப்பாளரின் செயற்பாடுகள் மேலும், ஒதுக்கீடு செய்யப்பட்டு முகாமைத்துவ உதவியாளருக்கு ஒப்படைக்கப்பட்டது. எதிர்காலத்தில் ஆகக் குறைந்தது 02 மாதங்களுக்கு ஒரு தடவையேனும் ஏடுகளின் சரியான தன்மை மற்றும் பொருட்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஏடுகளை நாளதுவரையாக்கும் செயற்பாட்டினையும் சரியாக மேற்கொள்வதற்கு தேவையான மேலதிக நடவடிக்கைகளும் தற்பொழுது இடம்பெற்றுள்ளன. | நிதிப் பிரமாணங்களில் குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 752 | பொருள் இருப்பு புத்தகத்தின் ஒவ்வொரு பதிவும் பொருள் பட்டோலை வவுச்சரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், களஞ்சிய புத்தகங்களில் பொருள் பெறுகைகள் மற்றும் வழங்கல்களை பதிவு செய்யும் போது அதனுடன் தொடர்புபட்ட பொருள் பெறுகைப் பத்திரங்கள் மற்றும் வழங்கல் பத்திரங்களின் இலக்கம் இருப்பு புத்தகங்களில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பெறுகைகள் வழங்கல்கள் என்ற இரண்டு வகையான பொருள் பட்டோலை வவுச்சர்களுக்கு தொடர் ஒழுங்குப்படி இலக்கமிடப்பட்டு அவை கோவை செய்யப்பட வேண்டிய போதிலும், நிலையத்தின் பொருள் பெறுகைகள் மற்றும் வழங்கல் பத்திரங்கள் தொடர் இலக்க ஒழுங்கு முறை இல்லாது வழங்கப்பட்டு கோவை செய்யப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | பல சந்தர்ப்பங்களில் உரிய பெறுகை மற்றும் வழங்கல் பத்திரங்களின் இலக்கங்கள் இருப்பு புத்தகத்தில் பதிவு செய்தல் தவறவிடப்பட்டுள்ளது என்பதனை ஏற்படுத்திக் கொள்கின்றேன். பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் கணனி முறைமையின் மூலம் இடம்பெறுவதனால் தொடர் இலக்க ஒழுங்கில் வழங்கப்படுகின்றது. எந்த வகையிலும், இரட்டிப்புத்தவறு இடம்பெறமாட்டாது. மேலும், களஞ்சிய பொறுப்பாளரால் நாளாந்தம் இருப்பு புத்தகங்களின் பதிவுகள் கணனி முறைமையுடன் ஒப்பிடப்பட்டு பேணப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணங்களில் குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 754 | ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவின் போதும் பொருள் பதிவேட்டுப் புத்தகங்கள் சமப்படுத்தப்பட்டு “கையிலுள்ள மீதி” அடுத்துவரும் நிதி ஆண்டிற்கு முன்கொண்டு செல்லப்பட வேண்டிய போதிலும், நிலையத்தின் களஞ்சிய புத்தகங்கள் 2018 ஆம் ஆண்டின் பின்னர் அவ்வாறு சமப்படுத்தப்பட்டு மீதி முன்கொண்டு செல்லப்பட்டிருக்கவில்லை. | இந்நிலைமையினைத் தவிர்த்துக் கொள்வதற்காக கடமைகள் மற்றுமொரு ஊழியருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கின்றேன். | நிதிப் பிரமாணங்களில் குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 01/2012 ஆம் இலக்க 2012 சனவரி 05 ஆந் திகதிய அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | ஒப்பந்தங்களை வழங்குவதற்கான சமூக அடிப்படையிலான அமைப்புக்களைத் தெரிவு செய்யும் குழுவிற்கு இடர் முகாமைத்துவ நிலையத்தினால் | இதற்காக மாவட்ட செயலாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கின்றேன். | அரசாங்க நிதிச் சுற்றறிக்கை யிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் குழுவிற்கான பிரதிநிதிகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெயரிடப்பட்ட பிரதிநிதி ஒருவர் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான பிரதிநிதி நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | | நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 6/97 ஆம் இலக்க 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 02(vi) ஆம் பந்தி | மேலதிக நேர வேலையை ஒப்படைப்பது சம்பந்தமாக தன்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் ஒவ்வொரு 03 மாதங்களுக்கு ஒரு தடவை நிறுவன தலைவரால் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத் தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட கால அட்டவணைக்கு இணங்க ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். இச்சேவை ஒழுங்கு ஆண்டு முழுவதும் நிறுவனத்தில் அடுல்படுத்தப்படுவதனால் அவ்வாறு 03 மாதங்களுக்கு ஒரு தடவை மீளாய்வு செய்தல் இடம்பெறவில்லை. | சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 19/89 ஆம் இலக்க 1989 மார்ச் 23 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி | பந்தியில் குறிப்பிட்ட உப பிரிவுகளில் காட்டப்படுகின்ற தகவல்களின் பிரகாரம் மேலதிக நேர வேலைகளுக்காக ஒரு பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும், சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | மேலதிக நேர வேலைப் பதிவேடு 2019 ஆம் ஆண்டிலிருந்து பேணப்பட்டு வருகின்றது அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் பதிவேட்டினை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (உ) | 12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பந்தி | பல்வகை ஆபத்துக்களை படம் வரைவதற்காக தரவுகளைச் சேகரிப்பதற்கான படிகளாக ரூபா 3,428,400 செலுத்தப்பட்டிருந்தும் அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பல்வகை இடர் விபரணக் குறிப்பினை தயாரிப்பதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட அறிக்கையின் தரவுகளைத் தயாரித்தல் ஒரு செயற்பாடாக இனங்காணப்பட்டிருந்த தனால் தனியாக அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தயவாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். | கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 65.03 மில்லியன் பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 33.32 மில்லியனாக இருந்தது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 31.71 மில்லியன் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு பிரதான மற்றும் ஏனைய வருமானங்கள் குறைவடைந்தமை பிரதானமாக காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை தொழில் முயற்சிகள் முகாமைத்துவ அதிகாரச் சட்டத்தை திருத்தும் நடவடிக்கை 2008 ஆம் ஆண்டிலிருந்து இடம்பெற்றிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை தொழில் முயற்சிகள் முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தை திருத்தும் நடவடிக்கையானது இடர் முகாமைத்துவ பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. | அதிகாரச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சர்வதேச தேவைப்பாட்டை சென்தாசி கட்டமைப்பிற்கு இணங்க இடர் ஆபத்துக்களைக் குறைக்கும் திட்டத்தை தயாரிப்பதற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 2015 ஆம் ஆண்டின் போது நிலையத்திற்கு ரூபா 1.30 மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2019 செப்தெம்பர் 31 ஆந் திகதி வரை அவ்வாறான திட்டம் தயாரிக்கப்படவில்லை.<br>அவ்வாறே 2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க இலங்கை தொழில் முயற்சிகள் முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 8 ஆம் அத்தியாயத்தின் 2(அ) பந்தியின் பிரகாரம் 2018 – 2030 காலப்பகுதிக்காக தேசிய இடர் முகாமைத்துவ திட்டத்தை தயாரிப்பதற்காக | தேசிய இடர் முகாமைத்துவ திட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென அமைச்சு தீர்மானித்திருந்தது. அதற்கிணங்க பல்வேறு தரப்பினர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டு வரைவு தயாரிக்கப்பட்டு திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அடுத்து வரும் 3 மாதங்களுக்குள் அங்கீகாரத்திற்காக அனுப்புவதற்கு முயற்சிகள் எடுப்பதாகத் தெரிவிக்கின்றேன். | தேசிய இடர் முகாமைத்துவ திட்டத்தை கூடியளவு விரைவாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 2 மில்லியன் நிலையத்திற்கு வழங்கப்பட்ட போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உரிய செயற்பாடு முடிவுறுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | மொனாகரலை மாவட்டத்தில் விவசாயக்கணறுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 26.9 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் மாவட்ட செயலாளரின் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ரூபா 10.5 மில்லியன் 2019 திசெம்பர் 10 ஆந் திகதி அமைச்சிற்கு திருப்பி ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, 53 நலன்பெறுநர்களுக்கு விவசாயக் கிணறுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 26.5 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் நலன்பெறுனர்களின் தேவைப்பாட்டினை மதிப்பீடு செய்யாது பணம் செலவு செய்யப்பட்டதன் காரணமாக தேவைப்பாடு இல்லாது 24 கிணறுகளை நிர்மாணிப்பதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 12 மில்லியன் விளைவற்ற செலவாக இருந்தது. | கிணறுகளைத் தெரிவு செய்தல் மாவட்ட செயலாளரின் மேற்பார்வையில் மாவட்ட உதவி பணிப்பாளரின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்றதனால் அது தொடர்பாக மாவட்ட செயலாளரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது மாவட்ட செயலாளரினால் பயன்படுத்தப்பட்ட வழிகாட்டிகள் நிலையத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மாவட்ட செயலாளர் நிலையத்திற்குச் சமர்ப்பித்த வழிகாட்டிகள் கிணறுகளைத் தெரிவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. | வழிகாட்டிகளின் பிரகாரம் செயற்படுகின்ற மையால் நிலையம் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

## 3.2 நிதியத்தின் குறைந்த பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 05 பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக கிடைத்துள்ள ரூபா 3.56 மில்லியன் பணம் மற்றும் சார்க் அமைப்பின் மூலம் முற்பணமாக 2015 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட | சார்க் அமைப்பின் இடர் முகாமைத்துவ நிலையத்தின் மூலம் இலங்கையில் சார்க் அமைப்பு நாடுகள் மற்றும் ஆசிய வலய நாடுகளின் பங்குபற்றலுடன் இடர் | நிதியத்தை உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ரூபா 1.75 மில்லியனும் பல்வேறு அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட ரூபா 772,000 நிதிகள் உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, தேசிய கொள்கைகள் மற்றும் திட்டமிடல் அமைச்சின் மூலம் 10 நகரங்களுக்காக இடர் ஆபத்து படங்களை தயாரிப்பதற்காக வழங்கப்பட்ட ரூபா 2 மில்லியன் பணமும் உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 2 மில்லியன் பணமும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது திருப்பி அனுப்பப்பட்டன.

ஆபத்துக்களைக் குறைப்பதற்காக ஒரு கருத்தரங்கினை நடாத்துவதற்காக முற்பணம் வழங்கப்பட்டது. அதன் தொடக்க செயற்பாட்டினை ஆரம்பித்து அமுல்படுத்துகின்ற வேளையில் சார்க் இடர் முகாமைத்துவ நிலையம் மீளமைப்புச் செய்யப்பட்டதுடன் தற்பொழுது வரை மீளமைப்புச் செய்யப்பட்ட சார்க் இடர் முகாமைத்துவ நிலையம் வலய ரீதியான பங்குபற்றல் உடன்படிக்கையின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை. எனவே இப்பணம் தொடர்பான நிரந்தரத் தீர்மானம் எடுப்பதற்கு முடியாதிருந்தது. இடர் ஆபத்துக்களைக் குறைக்கும் ஆலோசனைத் தொகுப்பைத் தயாரித்ததன் பின்னர் அதன் எஞ்சிய செயற்பாடுகளுக்காக மாகாண மட்டத்தில் இடர் ஆபத்துக்களைக் குறைப்பதற்காக வழங்கப்பட்ட ரூபா 1,000,000 பணத்தை செலவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் இடர் ஆபத்துக்களைக் குறைக்கும் ஆலோசனைத் தொகுப்பைத் தயாரிப்பதற்குரிய பரிசோதனைகள் அமுல்படுத்தப் பட்டுள்ளதனால் அதற்காக இப்பணத்தை செலவு செய்வதற்கு முடியாதிருந்தது.

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | இடர் ஆபத்துக்களைக் குறைக்கும் அபிவிருத்திப் பாய்ச்சலினை உள்ளடக்குவதற்காக வழிகாட்டிகளைத் தயாரிப்பதற்கு ஒரு ஆலோசனைச் சேவை நிறுவனத்தை தெரிவு செய்வதற்கான பெறுகைக் குழுவானது ஆலோசகரைத் தெரிவு செய்யும் வழிகாட்டிக் கோவையின் 2.6.3 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சரவைச் செயலாளரினால் நியமிக்கப்பட்டிருக்காததுடன் வழிகாட்டிக் கோவையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறிய வழிகாட்டிக் கோவையின் 6.6.4 ஆம் பந்தியின் பிரகாரம் இணங்கிக் கொண்ட பெறுமதியில் 20 சதவீதம் மாத்திரம் முற்பணமாகச் செலுத்தக் கூடியதாக இருந்தும் இணங்கிக் கொண்ட பெறுமதியில் 30 சதவீதமான ரூபா 1,927,500 முற்பணம் பிணையின்றி செலுத்தப்பட்டிருந்தது. வழிகாட்டிக் கோவையின் 6.6.1 ஆம் பந்தியின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்காததுடன் இணங்கிக் கொண்ட காலப்பகுதியில் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமான விடயங்களை அறிக்கையிடுவதற்கு அமைச்சு செயலாளரினால் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழு அறிக்கையினைப் பெற்றுக் கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கைக்கு தாக்கம் ஏற்படுத்தியுள்ள பல்வகை இடர் தகவல்களை உள்ளடக்கி ஒரு ஆபத்துக் குறிகாட்டிப் புத்தகத்தை அச்சிடுவதற்காக தெளிவாக | இப்புத்தகங்கள் பிரதான களஞ்சியத்தினால் தேவைப்பாட்டிற்கு இணங்க நேரடியாகப் பகிர்ந்தளித்தல் இடம்பெற்றிருக்கா மையின் காரணமாக இந்நிலைமை | வழிகாட்டிகளைப் பின்பற்றுதல் மற்றும் வேண்டிக் கொண்ட மாதிரி விபரக் குறிப்புக்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்பட்ட தேவைப்பாடும் நோக்கமும் இன்றியும் பகிர்ந்தளிக்க வேண்டிய நிறுவனம் தொடர்பான முன்னைய திட்டம் இன்றியும் ரூபா 1,850,000 செலவு செய்து 100 புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்தன. பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.6.1(அ)(ii) ஆம் பந்தியின் பிரகாரம் மாதிரி விபரக் குறிப்பினை மீளாய்வு செய்து அங்கீகரித்தல் இடம்பெற்றிருக்காததுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு வழங்கிய மாதிரி விபரக்குறிப்பினை மீளாய்வு செய்து அங்கீகரித்தல் இடம்பெற்றிருக்காததுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது வழங்கிய மாதிரி விபரக்குறிப்புக்களுக்கு முரணாக புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்தன. | ஏற்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாமைக்காக தேவையான முயற்சிகள் எடுக்கப்படும். | இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | வடகீழ் பருவப் பெயர்ச்சி மழையின் தாக்கத்தின் காரணமாக ஏற்படக்கூடிய இடர் நிலைமையை சமாளிப்பதற்காக பொலிதீன் உறைகளின் தேவைப்பாடு மாவட்ட அலுவலகங்களின் மூலம் 2019 ஆம் ஆண்டில் தெரிவிக்கப்பட்டிருந்தும் நிலையத்தினால் உரிய கொள்வனவுகள் திட்டமிடப்படாமையின் காரணமாக அவசரமான கொள்வனவுகளின் மூலம் உரிய உறைகளை வழங்குவதற்கு நேரிட்டிருந்தது. இதற்கிணங்க தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழவின் மாதிரி விபரக் குறிப்புக்களுக்கு இணக்கமற்ற வகையில் ஒரு திகதியில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,200,000 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 500 பொலிசெக் உறைகள் நிலையத்தின் நிதி மற்றும் மனித வளங்கள் பிரிவின் | 50KG பொலிசெக்களுக்காக ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இப்பெறுகை நடைமுறை இடம்பெறுகையில் பல சிறிய மற்றும் மத்திய அளவிலான குளக்கட்டுக்கள் உடைந்து செல்லும் ஆபத்துக்கள் காணப்பட்டதன் காரணமாக 50KG பொலிசெக் உறைகளை கொள்வனவு செய்வதற்காக நிறுவனத்தினால் ஆகக் குறைந்தது மூன்று கேள்வி மனுக்கள் சமர்ப்பிக்கப் பட்டிருக்காமையை கவனத்தில் கொண்டு 25KG பொலிசெக் உறைகளை கொள்வனவு செய்தலை கவனத்திற்கு எடுத்துக் கொள்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தீர்மானித்திருந்தது. மேலும், நீருடனான ஈரலிப்பான 50KG மணல் மூடையை ஒரு நபரினால் | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மாதிரி விபரக் குறிப்புக்களுக்கு இணங்க கொள்வனவு செய்தல் இடம்பெறல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | தனியாக தூக்கிக் கொண்டு செல்வது சிக்கலானதன் காரணமாக 25KG உறைகளை கொள்வனவு செய்வதற்கு குழு சிபாரிசு செய்திருந்தது. பல மாவட்டங்களுக்கு மற்றும் இலங்கை இராணுவப் படைக்கு பொலிசெக் உறைகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் 500 பொலிசெக் உறைகள் இடர்முகாமைத்துவ நிலையத்தின் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | |
| (ஈ) | 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 67 இடர் முகாமைத்துவச் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக நிலையத்தினால் ரூபா 68.3 மில்லியன் பணம் மூன்றாந் தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அச்செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்குரிய உடன்படிக்கைகள் செயற்திட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் பொறுப்பான நபர்கள் தொடர்பாக விபரம், ஒப்பந்தாரர்களுடன் மேற்கொண்ட உடன்படிக்கைகளின் பிரதிகள், செயல்முன்னேற்ற அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கோவைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற் திட்டங்களுக்குரிய கோவைகளை முறைப்படியாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிதன்மையும் நல்லாட்சியும்

### 4.1 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| நிலையத்தினால் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கை 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கைகளுக்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஆண்டறிக்கையினை சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 தீர்த்துவைக்கப்படாத சட்டரீதியான சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| வளிமண்டலவியல் திணைக்களத்திற்குச் சொந்தமான ஒரு காணியில் ரூபா 1,034.39 மில்லியன் செலவில் நிலையத்தின் தலைமை அலுவலகக் கட்டிடம் 2010 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அக்காணியையும் கட்டிடத்தையும் நிலையத்திற்கு சட்டரீதியாக ஒப்படைப்பதற்கான நடவடிக்கை மீளாய்வாண்டின் இறுதிவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இக்காணியையும் கட்டிடத்தையும் நிலையத்திற்கு ஒப்படைக்கும் நடவடிக்கை தொடர்பாக விசாரித்துப் பார்த்து எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | உரிய காணியையும் கட்டிடத்தையும் சட்டரீதியாக ஒப்படைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 4.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ‘‘2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களையும் | வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் எதிர்காலத்தில் செயற்படுவதாகத் தெரிவிக்கின்றேன். | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இலக்குகளையும் அடைந்து கொள்ளும் செயல்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

## 4.4 ஆளணி நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலையத்தின் அங்கீகரித்த பதவியணியினர் 465 ஆக இருந்தும் சேவையில் ஈடுபட்ட பதவியணியினர் 316 ஆக இருந்ததுடன் பதவியணியினர் வெற்றிடங்கள் 149 ஆகக் காணப்பட்டது. | கருத்துரைகள் தரப்படவில்லை. | பதவியணியினர் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |